1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No. point of order you have already staged a walk out. You have returned now. I am ready to receive you.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1981) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

---

* 1981ம் ஆண்டு சனவரி மாதம் 28-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

(முற்பகல் 11-40)

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 4 in sub-clause (1), for columns (a) and (b), substitute the following,

(a) "Where the rate of charges for accommodation for residence is fifty rupees or more but is less than hundred rupees per person per day".

(b) "Where such rate is hundred rupees or more per person per day".

The amendment was duly seconded.

திரு. துரை முருகன் : நான் மொழிந்திருக்கிற திருத்தத்தை வலியுறுத்தி நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை இந்தச் சட்ட முன் வடிவின் மீது சொல்ல விழைகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு எதற்காக வருகிறது என்பதற்கு அதற்குரிய காரண விளக்கங்களில் அமைச்சர் அவர்கள் ஒரு அழகான தத்துவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ''சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையை உயர்த்த அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளது.' இது, தத்துவம். அமைச்சர் அவர்கள் சொல்கிற தத்துவம். இந்த சட்ட முன்வடிவு எதற்காகக் கொண்டு வரப்படுகிறது என்பதை அடுத்த வரி சொல்கிறது. ' மாநிலத்தின் நிதி வாயில்களைப் பெருக்கவும், அதே சமயம் சாதாரண மனிதன் அதனால் பாதிக்கப்படாத வகையிலும் இருக்க வேண்டி, ஓட்டல்களிலும், தங்கும் இல்லங்களிலும் தங்கும் வசதிக்கு ஒரு நாளைக்கு ஒருவருக்கு இருபது ரூபாய் அல்லது அதற்கு அதிகப்படியாக கட்டணம் விதிக்கப்படுகின்றவிடத்து அங்கு அளிக்கப்படுகிற ஆடம்பர வசதிகளுக்கு வரி விதிக்க அரசு முடிவு செய்தது. ஒரு ஓட்டலில்

தங்கியிருப்பவருக்கு ஆடம்பர வசதி செய்து கொடுக்கிறபோது அவரிடமிருந்து அவ்வரியை ஓட்டலின் உரிமையாளர் வசூலிக்க வேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே உள்ளபடியே என்னைப் பொறுத்த வரையில் சொல்கிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வந்தவர் அரசாங்கத்தின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு கண்டுபிடித்திருக்கிற இந்த வழி இருக்கிறதே, அந்த வழியைக் கண்டுபிடித்ததற்காக அவருக்கு ஒரு கலைமாமணி பட்டமே கொடுக்கலாம். அரசாங்கத்தின் நிதி ஆதாரங்களைப் பெருக்க எத்தனையோ வழிகள், எத்தனையோ வகைகள் இருக்கின்றபோது தேடிக் கண்டுபிடித்து, ஓட்டல்களில் தங்கி இருக்கிறார்களா என்று பார்த்து ஓட்டல்களில் தங்கியிருப்பவர்களுக்கு கட்டணத்தின் மேல் வரி என்பது வட்டிக்கு வட்டி வாங்கினான் வெங்கட ரெட்டி என்பது போலிருக்கிறது. ஓட்டல்களில் தங்குபவர்களிடமிருந்து வரி வசூல் செய்யப் போகிறோம் என்று சொல்லிவிட்டுப் போயிருந்தால் பொத்தாம் போக்கில் போயிருக்கும். அப்படியல்லாது, ஏழைகளுக்கு நாங்கள் வசதி செய்து தருகிறோம் என்று ஓட்டல் அறைகளில் தங்குகிறவர்களுக்கு வரி என்று சொல்கிறபோது, ஏழை என்று சொல்லி, அவன் தலையில் ஒரு அடி, இப்படி.ஒரு புத்திசாலித்தனமான யோசனை உங்களுக்கு எப்படி வந்தது அந்த ஐடியா எப்படி வந்தது என்பதைப் பார்த்து நான் வியப்படைகிறேன். ஆகவே அதற்காக ஒரு கலைமாமணி பட்டம் அமைச்சர் அவர்களுக்கு அளிக்க வேண்டும் அல்லது அந்த ஐடியாவைச் சொன்னவருக்கு அளிக்கலாம் என்பது என் எண்ணம்.

திரு. எஸ். எஸ். இராஜேந்திரன்: கலைமாமணி பட்டம் அளிக்க வேண்டும் என்று சிபார்சு செய்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த உரிமை கிடையாது.

திரு. துரைமுருகன்: *** கூடத் தரலாம். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒருவர் ஓட்டலில் சென்று தங்குகிறார். அவர் . தங்கியிருக்கிற அறைக்கு ரூ. 20 லிருந்து ரூ. 50 வரை கட்டணம் வசூலிக்கப்படுமானால் அப்படி வசூலிக்கப்படுகிற கட்டணத்தில் 5 சதவீதம் வரி என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** அந்த வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. துரை முருகன்: இது வஞ்சகப் புகழ்ச்சி அணி. இந்த இருபது ரூபாய் அறையில் என்னென்ன இருக்கும் என்று சொல்கிறார்கள்?

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. துரை முருகன்] [1981 பிப்ரவரி 26

Including charges for air-conditioning, television, radio, music, extra beds and the like excluding charges for food, drink and telephone calls.

ரூ. 20 கொடுத்து ஒரு ரூம் எடுத்தால் டி.வி., ஏ. சி., டபிள் பெட், குட்டி பெட் என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். சோபாசெட் இருக்கும். இவ்வளவு வசதிகளும் கொண்ட ஒரு அறை ரூ. 20-க்கு எங்கே கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? எங்களை நாடி வருகிற சில பேர்களுக்கு, தங்க வசதி இல்லாதவர்களுக்கு அந்த ஓட்டலை ரெக்கமன்ட் செய்யலாமே என்று கேட்கிறேன். ரூ. 20-லிருந்து ரூ. 50 வரை அறைக் கட்டணம் வசூல் செய்தால் 5 சதவீதம் வரி கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த புத்திசாலித்தனமான திட்டத்தை அல்லது வழியை எப்படி கண்டுபிடித்தார்கள் என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.

அதற்கும் மேலே சொல்லப்படுகிறது. 50 ரூபாய்க்கும்மேலே போனால், அதற்கு ஒரு ரேட் 50 ரூபாய்க்கு மேற் கொண்டு போனால் அதற்கு 10 சதவீதம் வசூலிக்கலாம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலம் நிதி ஆதாரத்தை கோடி கணக்காகப் பெருக்கி, இந்த பட்ஜெட்டை டெபிசிட் இல்லாத பட்ஜெட்டாக—பட்ஜெட் வருகிறதோ இல்லையோ—ஒரு டெபிசிட் பட்ஜெட் இல்லாத நிலையில் தயாரிப்பதற்கு நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது ஏன் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சாதாரணமாக ஏழைகள்தான் 20 ரூபாய் கொடுத்து சென்னையிலே, ஓட்டல்களிலே தங்குகிறார்கள். அப்படி கொடுப்பவர்களுக்கு அறையில் நுழைவதற்கு வசதி இருக்காது; எலி பொந்திலே நுழைவதைப் போல் நுழைய வேண்டும். பெட்டிலே பெட் ஷீட் இருக்காது: அப்படியே பெட்ஷீட் இருந்தால் 15 நாட்களுக்கு முன்பு போட்டதாக இருக்கும்; தலையணை இருக்காது; அப்படியே இருந்தால் பள்ளமாக இருக்கும்; தரையிலே 'தலைபடும். இப்படிப்பட்ட நிலையிலே, 20 ரூபாய் கொடுத்து தங்குகிறவர்களுக்கு வரி என்று போடுகிறீர்கள்; ஆனால் அவர்களுக்கு சலுகை தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். எனவேதான், நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். 50 ரூபாய் வாடகை கொடுப்பதாக இருந்தால், வேண்டுமானால் 5 சதவீதம் வரி போட்டுக் கொள்ளுங்கள். இந்தக் கட்டணம் ரூ. 50-லிருந்து ரூ. 100 என்றிருந்தால் 10 சதவீதம் இருக்கட்டும். அதற்கும் மேலாக, ரூ.100-க்கு மேலிருந்தால் லக்சுரியாக எடுத்துக் கொண்டு 10 சதவீதம், 15 சதவீதம் என்று வரியைப் போடலாம்.

1981 பிப்ரவரி 26] [திரு. துரைமுருகன்]

பெரிய பெரிய ஓட்டல்களிலே யார் தங்குகிறார்கள் : கம்பெனி டைரக்டர்கள் வந்து தங்குகிறார்கள் ; பெரிய அரசாங்க அதிகாரிகள் வந்து தங்குகிறார்கள் ; பெரிய பெரிய கம்பெனிகளின் நிர்வாகிகள் வந்து தங்குகிறார்கள். சென்னை நகரம் என்பது என்ன ? ஒரு தலைநகரம், இந்த ஊரிலே மற்றக் கிராமங்களிலே இருந்து வருகின்றவர்கள் வந்து தங்குகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு கெஸ்ட் அவுஸ் கிடைக்காத காரணத்தினால், டி.பி. கிடைக்காத காரணத்தினால் இப்படிப்பட்ட ஓட்டல்களிலே வந்து அவர்கள் 20 ரூபாய் கொடுத்து தங்குகிறார்கள். அதற்குக் குறைந்து அறைகள் கிடைப்பதில்லை. அவர்களுக்கு வரி என்று சொன்னால், நீங்கள் எந்த விதத்திலே ஏழைகளுக்கு சலுகைகள் கொடுக்கிறீர்கள் என்பது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதற்கும் மேலே ஒரு அசெசிங் அதாரிடி என்று ஒருவரை இந்தக் கணக்குகளை சரிபார்ப்பதற்குப் போடுகிறீர்கள். ஆனால், யார் இந்த வரியை வசூல் செய்கிறார்கள். ஓட்டல்காரர்கள். அவர்கள் அப்படி வசூல் செய்து கணக்கைக் கொடுப்பார்கள். அப்படி அவர்கள் கொடுக்கும் கணக்கை இந்த அதிகாரி பார்ப்பது என்றால், நிலைமை என்ன ? இப்போது என்ன நடக்கின்றது என்பது தெரியும். இப்படிப்பட்ட ஓட்டல்களிலே யார் வந்து தங்குகிறார்கள், எதற்காக வந்து தங்குகிறார்கள், எங்கிருந்து வந்து தங்குகிறார்கள் என்ற கணக்கை எல்லாம் ஏற்கனவே ஓட்டல் முதலாளிகள் நாள்தோறும் போலீசுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஊர்க்காரர், என்ன காரணத்திற்காக, அவர் பஸ்ஸிலே வந்தாரா, ரயிலிலே வந்தாரா, நடைபாதையாக வந்தாரா என்ற கணக்கையெல்லாம் எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்கும் மேலே ரிஜிஸ்டர் எழுத வேண்டுமென்று சொன்னால், என்ன நடக்கும்? இவ்வளவு பேர்கள் வந்து தங்கவில்லை ; எனவே அவர்களிடம் வசூலிக்கவில்லை என்று சொல்வார்கள். அதற்குமேலே, அதிகாரி ஏதாவது சொல்லி, அதன் மூலம் லஞ்சலாவண்யத்திலே போகக் கூடிய நிலைமைகள்தான் ஏற்படுமே தவிர, இது ஏழைகளுக்குப் பயனளிக்காது. பெரிய பெரிய ஓட்டல்களிலே வந்து தங்குகின்றவர்களிடம் 15 சதவீதம், 20 சதவீதம் என்று வசூலித்துக் கொள்ளுங்கள் ; பரவாயில்லை. பெரிய பெரிய ஓட்டல்களிலே இன்கம்டாக்ஸ் முதலாளிகள், பஸ் ஓனர்கள் அவர்களுடைய வேலை நிமித்தம் வந்து தங்குகிறார்கள். அவர்களிடம் வசூல் செய்யலாம்.

ஒருவர் கிராமத்திலிருந்து அதாவது காட்பாடியிலிருந்து, சென்னைக்கு வேலை நிமித்தம் வந்தால், ரூ. 20 கொடுத்து தங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அப்படித் தங்கினால், அவரிடம் ஓட்டல் முதலாளி வரி வசூலிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஏற்கனவே ஓட்டல்காரர்கள், எக்ஸ்ட்ரா பணம்

கேட்கிறார்கள். 50 ரூபாய் என்று பில் போட்டால், 60 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். 10 ரூபாய் எக்ஸ்ட்ரா கேட்கிறார்கள். பற்றாக்குறைக்கு இப்படி ஒரு வரியைப் போட்டால், எப்படி அது ஏழைகளுக்கு சலுகையாக இருக்க முடியும் ஏழைகளுக்குப் பாதகம் ஏற்படும். இதற்கிடையே அதிகாரிகளின் குறுக்கீடு வேறு இருக்கும். ஏற்கனவே, ஹெல்த் ஆபீசர்கள் போகிறார்கள்; அவர்களுக்கு விருந்து நடக்கிறது. அதற்கு மேலுள்ள அதிகாரி போகிறார்; அவருக்கு வீட்டிற்கு பார்சல் போகிறது. பற்றாக்குறைக்கு ஒரு அசெசிங் அதாரிடியைப் போட்டிருக்கிறீர்கள். இந்தச் சலுகை அவர்களுக்குத் தான் போய்ச் சேரும். ஏழைகளுக்குப் பயனளிக்காது. ஆனால், இந்த சர்க்கார் ஏழைகளுக்கு சலுகை என்று போட்டிருக்கிறார்கள். ஆனால், ஏழைகள்தான் இதனால் கஷ்டப்படுவார்கள். தப்பு செய்துவிட்டு, பின்னால் அறிக்கை கொடுக்கக் கூடிய நிலையில் இல்லை. என்னுடைய திருத்தத்தைக் கொஞ்சம் ஏற்றுக் கொண்டால், ஏழைகளுக்கு இந்தத் தொல்லையே வராது; அமைச்சர் அவர்களும் நியாயத்தின் பேரிலே, எதிர்க் கட்சிக்காரர்கள் கொண்டு வந்ததை நாங்கள் ஏற்பதா ?

(முற்பகல் 11-50)

அதற்காகவா நாங்கள் இவ்வளவு மெஜாரிட்டியோடு இருக்கிறோம் என்ற மனோபாவத்தில் இதை ஆதரிக்கக் கூடியவர்கள் அல்ல. ஆனாலும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நியாயம் எந்தப் பக்கம் இருந்தாலும் வாதாடக்கூடிய உள்ளம் படைத்தவர்கள். அந்த உள்ளம் இன்னும் பட்டுப் போகவில்லை என்று பட்டுக்கோட்டைக்காரரை நம்புகிற காரணத்தால் நிச்சயமாக என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் இரண்டு வார்த்தை பதில் கூறுகிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : No, reply, sir.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

பிரிவு 4 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

1981 பிப்ரவரி 26] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 5 முதல் 24 வரை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(இ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம் ரத்து) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

திரு. துரை முருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சிறு விவகாரம். இதற்கு முன்னால் லிட்டர் மீது சேல்ஸ் டாக்ஸ் போட்டுக் கொண்டிருந்தார்கள். அது கூடாது என்று சொல்லி இப்போது அதன் விலையின் மீதே விற்பனை வரியைப் போட்டு உயர்த்தலாம் என்பதுதான் மசோதாவின் உள்நோக்கம். இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் யார் என்று நாம் பார்க்க வேண்டும். மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அப்படி மாற்றி யிருக்கிறார்கள். ஆகவே, நாங்களும் மாற்றிக் கொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அது சரியான வாதம் என்று படவில்லை. மற்ற மாநிலத்துக்காரர்கள் எதை எதைச் செய் கிறார்களோ அதையெல்லாம் இவர்கள் செய்யத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்டால் இல்லை. மற்ற மாநிலத்துக் காரர்கள் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத் தடைச் சட்டத் தைக் கொண்டு வரவில்லை. ஆனால் நீங்கள் கொண்டு வரு கிறீர்கள். இதிலே மட்டும் மற்ற மாநிலங்களைப் பின்பற்று வதாகக் கூறுகிறார்கள். லிட்டர் மீது போடப்பட்ட சேல்ஸ்

---

* 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.